www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

A

# ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச்- 2023

## 11 - ஆம் வகுப்பு - வணிகவியல்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது -----------
   அ) போக்குவரத்து ஆ) பண்டகசாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

2. பின்வருவனற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
   அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல் ஆ) இடர் ஏற்றல்
   இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை ஈ) சம்பளம் / கூலி

3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
   அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

4. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
   அ) தனியாள்வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

5. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
   அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல் நாட்டு நிறுமம்
   இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

6. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
   அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
   இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்

7. கீழ்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?
   அ) ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்.
   ஆ) பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்
   இ) அரசாங்க வங்கியாளராக நடத்தல்
   ஈ) மற்ற வங்கிகளில் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்

8. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு --------------- ஆகும்
   அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மை காரணம்

9. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் --------------- என அளிக்கப்படுகிறது.
   அ) மின்னணு வணிகம் ஆ) இணையதளம் இ) வலைத்தளம் ஈ) வர்த்தகம்

10. கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான ---------------- விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்
    அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) இவை எதுவும் இல்லை

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

11. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

12. வெளிநாட்டில் இருந்து சரக்குகள் வாங்கப்படுவது ------------ என அழைக்கப்படும்

அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி

13. வியாபார இடைநிலையர்களை ----------- வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு

14. தவறான இணை எது?

அ) உள்நாட்டு வியாபாரம் ---- மூன்று வகைப்படும்
ஆ) மொத்த வியாபாரம் ---- சில்லறை வியாபாரி
இ) சில்லறை வியாபாரம் ---- நுகர்வோர்
ஈ) பன்னாட்டு வியாபாரம் ---- வெவ்வேறு நாடு

15. பொருத்துக

1. சாலை வியாபாரிகள் ---- a. கூவிக் கூவி விற்பனை
2. சந்தை வியாபாரிகள் ----- b. நிரந்தர இடமின்றி விற்பனை
3. வாகன வியாபாரிகள் ----- c. வீதிகள் குறுக்கீடும் இடங்கள் மற்றும் நடைபாதைகளில் விற்பனை
4. இடம் பெயர் வியாபாரிகள் ---- d. ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் விற்பனை

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | c | d | a | b |
| ஆ. | c | a | b | d |
| இ. | c | d | b | a |
| ஈ. | c | a | d | b |

16. இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி

அ) ஐ சி ஐ சி ஐ ஆ) எஸ் பி ஐ இ) பி என் பி ஈ) ஆர் பி ஐ

17. ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும் உறுதி மொழிகளில் தொகுதியும் :

அ) உடன்பாடு ஆ) ஒப்பந்தம் இ) முனைவு ஈ) ஏற்பு

18. ஒப்பந்த மீறலுக்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு

அ) சேதம் ஆ) ஊதியம் இ) பணம் ஈ) காசோலை

19. கணக்கீட்டு ஆண்டு என்பது

அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆ) மார்ச் 1 முதல் பிப்ரவரி 28 வரை

இ) சூலை 1 முதல் ஜூன் 30 வரை ஈ) சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

20. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?
    அ) இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர்  ஆ) நிதி அமைச்சர்
    இ) பிரதம மந்திரி  ஈ) இந்திய குடியரசு தலைவர்

## பகுதி --- II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
23. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
24. வரையறு பொறுப்பு என்றால் என்ன?
25. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
26. மைய வங்கி பற்றி சுருக்கமாக விளக்குக
27. பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக
28. தரகர் என்பவர் யார்?
29. வருமானவரி என்றால் என்ன?
30. ஒருவகைப் பொருட்களில், ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும், விற்பனை செய்யும் சில்லறைக் கடைகளை எவ்வாறு அழைக்கப்படுகிறது?. அவற்றிற்கு உதாரணம் தருக

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 3 )
32. பண்டக காப்பாளர் இரசீது - பண்டக சான்றானை வேறுபடுத்துக. ( ஏதேனும் 3 )
33. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. ( ஏதேனும் 3 )
34. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விளக்குக
35. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
36. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?
37. சிறு குறிப்பு வரைக. (அ) தொழில்  (ஆ) சிறப்புத் தொழில்
38. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் ( NEFT ) - விளக்குக
39. அரசு நிறுமம் என்றால் என்ன?
40. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்யப்படும் வியாபாரம் எது? உதாரணம் தருக.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி (ஏதேனும் 5)

( அல்லது )

ஆ) உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

42. அ) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

43. அ) துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக

( அல்லது )

ஆ) சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை? (ஏதேனும் ஐந்து)

44. அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 5 )

45. அ) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக

46. அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? ( ஏதேனும் 5 )

47. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக

( அல்லது )

ஆ) கூட்டுறவின் கொள்கைகள் என்ன? (ஏதேனும் 5)

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## விடை குறிப்பு ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச்- 2023

### 11 - ஆம் வகுப்பு - வணிகவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | அ | போக்குவரத்து | 1 | ஆ | பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் |
| 2 | ஈ | சம்பளம் / கூலி | 2 | அ | சேதம் |
| 3 | அ | உற்பத்தித் தொழில் | 3 | ஆ | இரண்டு |
| 4 | அ | தனியாள்வணிகம் | 4 | ஆ | கூட்டுறவு |
| 5 | ஈ | சட்டமுறை நிறுமம் | 5 | அ | உற்பத்தித் தொழில் |
| 6 | ஆ | குடியரசுத் தலைவர் | 6 | அ | இறக்குமதி |
| 7 | ஆ | பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் | 7 | ஆ | நிதி அமைச்சர் |
| 8 | ஆ | கூட்டுறவு | 8 | அ | போக்குவரத்து |
| 9 | அ | மின்னணு வணிகம் | 9 | ஆ | எஸ் பி ஐ |
| 10 | இ | வட்டி | 10 | ஈ | சட்டமுறை நிறுமம் |
| 11 | இ | 2006 | 11 | இ | வட்டி |
| 12 | அ | இறக்குமதி | 12 | அ | c d a b |
| 13 | ஆ | இரண்டு | 13 | ஆ | குடியரசுத் தலைவர் |
| 14 | அ | உள்நாட்டு வியாபாரம் ---- மூன்று வகைப்படும் | 14 | அ | ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை |
| 15 | அ | c d a b | 15 | இ | 2006 |
| 16 | ஆ | எஸ் பி ஐ | 16 | ஈ | சம்பளம் / கூலி |
| 17 | அ | உடன்பாடு | 17 | அ | உடன்பாடு |
| 18 | அ | சேதம் | 18 | அ | தனியாள்வணிகம் |
| 19 | அ | ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை | 19 | அ | உள்நாட்டு வியாபாரம் ---- மூன்று வகைப்படும் |
| 20 | ஆ | நிதி அமைச்சர் | 20 | அ | மின்னணு வணிகம் |

www.Padasalai.Net